
# வாலிபன்
# VAALIPAN



"என் கிருபை உனக்குப் போதும் ; பலவீனத்திலே
என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால்,
கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி,
என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்
தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்"
II கொரிந்தியர் 12:9

வாலிபவர்களுக்கான இதழ் இதழ் - 59 ஐப்பசி - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிபன்
# VAALIPAN

**கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு!**

உலக இரட்சகராம் கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட்டு இங்கிலாந்து தேசத்திலிருந்து இலங்கை நோக்கி மிஷனரிகள் வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதை, 2014ம் வருடம் நாம் நினைவுகூர அழைக்கப்படுகின்றோம்.

200 வருடங்கள் இலங்கையில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டும் இன்னும் இந்நற்செய்தி கொண்டு செல்லப்படாத இடங்கள் தான் எத்தனை எத்தனை!! மனங்கள் தான் எத்தனை எத்தனை!!

இம்மாதம் 27, 28, 29ம் திகதிகளில் கோட்டைமுனை சேகர ஞாயிறு பாடசாலையும் வாலியர்களும் இணைந்து நடாத்தும் "பாதை" வேதாகம முறை பாடசாலை கோட்டைமுனை முன்றலில் நடைபெறவிருக்கின்றது. இதற்காய் தங்கள் ஜெபங்களில் தாங்கிக் கொள்ளவும்.

மேலும், பல தேவ மனிதர்களும், விசுவாசிகளும் கேட்டுக் கொண்டதற்கமைய வாலிபன் சஞ்சிகையில் "கேள்வி-பதில்" பகுதியொன்றினை இணைத்துக் கொள்ள வாஞ்சிக்கிறோம். தங்களது விசுவாச வாழ்வில் வரக்கூடிய கேள்விகளை தபால் அட்டையொன்றில் அல்லது எமது e-mail க்கு அனுப்பி வைக்கவும். பிரகரிக்கக்கூடிய, பக்திவிருத்தி ஏற்படுத்தக்கூடிய கேள்விகளையும் அதற்கான விடைகளையும் கிறிஸ்துவிலுள்ள விசுவாசம் பெருகும் நோக்குடன் பிரசுரிக்க வாஞ்சிக்கின்றோம்.

வாலிபன் ஊழியத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நன்றி செலுத்தும் வழிபாடு மார்கழி மாதம் 9ம் திகதி கோட்டமுனை மெதடிஸ்த திரு அவையில் நடைபெறும். மேலும், எமது ஊழியங்களுக்காய் வழமை போலவே ஜெபித்துக் கொள்ளவும்.

*கிறிஸ்துவின் பணியில்*
*ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

## கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம்

தொடர் நிகழ்வாய்... (29)

*- சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்*

"நீதிமான்னளையல்ல, பாவிகளையே மனம் திரும்புவதற்கு அழைக்க வந்த கிறிஸ்வுக்காக உழைக்க, பாடுபட ஏற்ற இடமிதுவே" என்பதாக இவ்விடம் பற்றி வெஸ்லி ஐயர் குறிப்பிடுகின்றார். இவ்விடத்தில் வாழ்ந்த பாவிகளான பல மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பைக் காண்பிக்க வெஸ்லி ஐயர் அவர்கள் பின்நிற்கவேயில்லை. "நியூகாசிலில்" வெஸ்லி அவர்கள் சுமார் இரண்டு வாரங்கள் தங்கினார். அவ்விடத்தில் செய்யப்பட்ட ஊழியத்தைக் குறித்து கீழ்க்கண்டவாறு எழுதுகிறார். "அப்பட்டணத்தின் ஏழை மக்கள் வாழ்ந்த ஓதுக்கப்பட்ட இடமாகிய 'சந்கேட்' எனுமிடத்திற்கு காலை ஏழு மணியளவில் நடந்து சென்று அங்குள்ள ஒரு சாலையின் ஓரத்தில் 'ஜோன்டெயிலர்' என்பவரோடு நின்று கொண்டு நூறாவது சங்கீதத்தைப் பாட ஆரம்பித்தேன். மூன்று அல்லது நான்கு பேர்கள் ஆரம்பத்தில் என்ன நடக்கிறது என்பதைக் கேட்கக் கூடினர். சீக்கிரத்தில் இருநூறு, முந்நூறு என மக்களின் தொகை பார்த்திருக்க அதிகரிக்க ஆரம்பித்து விட்டது. நான் பிரசங்கம் செய்து முடிப்பதற்குள் சுமார் ஆயிரத்து இருநூறு பேர்கள் அளவுக்குக் கூடிவிட்டனர், நான் கொஞ்சமும் எதிர்பார்த்திராத அளவு கூட்டம். பரிசுத்த ஆவியானவரின் அருள் வேண்டி, அதிக மனதுருக்கத்துடனும், கண்ணீருடனும் மனதிற்குள் பாரத்தோடு பிரார்த்தனை செய்தேன்.

என்ன ஆச்சரியம்! பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் மடை திறந்த வெள்ளம் போன்று என்னுடைய உள்ளத்திற்குள் பாய்ந்தோடுவதை நன்கு என்னால் உணரக் கூடியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வடைந்தேன். என்னையே என்னால் நம்ப முடியாதளவுக்கு ஒரு பரவசம். சந்தோஷச் சிறகுகள் என்னுடைய உள்ளத்தினுள் விபரிக்க முடியாத அளவுக்கு பரவசத்தைத் தூண்டின. அது என்ன உணர்வு? உலக வார்த்தைகளினால் அவைகளின் ஆழங்களை விபரிக்கவே முடியாது. உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் இப்பிறப்பான உயர் அனுபவத்திற்குள் கடந்து வரவேண்டுமென்ற தீவிர வாஞ்சை எனக்குள் பிறப்பதை துல்லியமாக எனக்குள் புலர்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன். கூடியிருந்த அந்த மக்கள் கூட்டத்திற்கு நான் மிகத் தெளிவாக "நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, "நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம்." என்ற பொருளில் தான் பிரசங்கித்தாகக் கூறுகிறார்.

மேலும் இவை பற்றி அவர் விபரிக்கையில் "மெய் மறந்த நிலையில் மக்கள் என்னையே வியப்புடன் நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்களிடம், நான் யாரென அவர்கள் அறிந்து கொள்ள விரும்பினால் அதை நான் உங்களுக்குச் செல்ல விரும்புகிறேன். என் பெயர் ஜோன்வெஸ்லி. பரிசுத்தராகிய கிறிஸ்து இயேசுவின் வழியாகவும், துணையோடும் இன்று மாலை ஐந்து மணிக்கு மீண்டும் இவ்விடத்திலே உங்களுடன் பரிசுத்தரின் வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வேன் என்பதாக வெஸ்லி ஐயர் அவர்கள் அறிவித்தார்.

அன்று மாலை ஐந்து மணிக்குச் சரியான நேரத்திற்குப் பிரசங்கம் பண்ணும்படியாக ஒழுங்கு செய்யப்பட்ட மலையடிவாரத்தில் திரளான மக்கள் கூடி விட்டனர். இம்மாதிரித் திரளாக மக்கள் கூட்டம் கூடினதை இதற்கு முன்னர் 'பூர்லீட்' எனுமிடத்திலோ, 'கென்சிங்டன்' சதுக்கத்திலோ எவரும் கண்டதேயில்லை. அவ்வளவு பெரிய கூட்டம். வெஸ்லி ஐயர் அவர்களுடைய சத்தம் அந்நாட்களில் தெளிவாகவும், அதிக சத்தமாகவும் இருந்தபோதிலும், அங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியிருந்த கூட்டத்தில் பாதிப்பேருக்கு மேலாக அவர் சத்தத்தை கேட்க முடியாது என்பதை யாவரும் உணர்ந்தனர். மலைச்சரிவில், எல்லாப் பக்கங்களிலும் அமர்ந்திருந்த மக்கள் அனைவரையும் பார்த்து பிரசங்கிக்கும்படியாக ஒரு நல்ல உயரமான இடத்தின் மீது ஏறி நின்று கொண்டார். அவர் அந்த மக்களுக்கு எடுத்துரைத்த தேவனுடைய வசனம். "நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன். அவர்களை மனப்பூர்வமாய் சிநேகிப்பேன்" என்ற வசனத்தை அடிப்படையாகக் கொண்டமைந்தது.

அவர் பிரசங்கம் செய்து முடித்த உடனே, கூடியிருந்த சகல எளிமையான மக்களும், அவருடைய வல்லமை மிகுந்த பேச்சினால் கவரப்பட்டு, மிகுந்த அன்பினால் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். அவர்களிடமிருந்து வெளியே வருவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியதாக அமைந்து விட்டது என அவர் குறிப்பிடுகிறார். அது மாத்திரமின்றி சற்று நேரத்திற்குப் பிற்பாடு அவர் வந்த வழியே திரும்பிச் செல்லாமல் வேறொரு வழியாக தன்னுடைய இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றதாகவும், ஆயினும் திரள்கூட்ட மக்கள் தன்னுடைய இருப்பிடத்தைச் சுற்றி நின்று காத்துக் கொண்டிருப்பதைக் கண்டு தான் வியப்புற்றதாகவும் குறிப்பிடுகிறார். மேலும் சில நாட்கள் தமக்கு வேதம் கற்பிக்கும்படியாகத் தம்முடன் தங்கியிருக்க வேண்டுமென்ற கோரிக்கையைத் தம்மால் புறம்தள்ள முடியாமல் போனதாக எழுதுகிறார். இந்நாட்களிலிருந்து ஜோன்வெஸ்லி ஐயரின் வாழ்வில் கல ஆச்சரிய மாற்றங்கள் நிகழ ஆரம்பிக்கின்றன. மனம் திறந்த உண்மையைத் துல்லியமாக எழுதினால், இந்த "ஆச்சரிய மாற்றங்கள்" என்ற சொற்றொடரை விபரிப்பது மனுஷீக அறிவில் மிகவும் சிரமம். ஏனெனில் தற்கால மெதடிஸ்த உலகிலே இதனை, இதன் அர்த்தத்தை, ஆழத்தை உணர்வு கொண்ட மக்களாக கண்ணோக்குபவர்கள் மிகச் சிலரேயென்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

**- வெஸ்லி மீண்டும் வருவார் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெபம்



✈ ஆத்துமாவில் தேவனுடைய ஜீவனைக் காத்துக் கொள்வதற்கு எமக்கு வேண்டியதான தேவ கிருபையில் சார்ந்ததாகவே தேவனுடைய கட்டளையாகிய "இடைவிடாமல் ஜெபியுங்கள்" என்பது தங்கியுள்ளது. காற்றில்லாமல் சரீரம் எப்படி ஒரு கணமேனும் பிழைக்காதோ அதே போல ஆத்துமா அவரது கிருபையின்றி பிழைக்காது.

**- ஜோன்வெஸ்லி**

✈ "முடிங்காலூன்றிய ஜெபங்கள் உன்னை என்றும் நிலை நிறுத்தும்" தேவனுடன் ஒன்றிணைந்து சேவையாற்ற ஜெபமே உன்னதவழி"

**- வெஸ்லி L. டுவெல்**

✈ "பறவையின் இரு சிறகுகள் போல ஒரு கிறிஸ்தவனுக்கு துதியும் ஜெபமும் அமையும். சிறகொடிந்த பறவை பறக்க முடியாது"

**- J. வெஸ்லி அட்கொக்**

✈ "ஜெபித்த பின் உங்களால் ஜெபித்ததை விட பல காரியங்களில் ஈடுபட முடியும். ஆனால் ஜெபிக்குமுன் உங்களால் எதையுமே மேலதிகமாக செய்ய இயலாது." **- A.J. கோடன்**

✈ "பெலவீனமான கிறிஸ்தவன் முழங்காலில் நின்று ஜெபிப்பதைக் கண்டு சாத்தான் நடுங்குவான்." **- வில்லியம் கேபெர்**

✈ "ஜெபம் விசுவாசத்தின் குரல்" **- வீல்லியம் வான் ஹோம்**

✈ ஜெபிப்பதற்கு கிடைக்கும் மறைவிடமே இப்பூமியில் நான் அதிகமாய் நேசிக்கும் இடம்" **- அன்ருமுறே**

✈ "ஜெபமானது ஒருவரது சொந்தப் பலவீனத்தையும், அற்பத்தனத்தையும் அறிக்கையிடுவதாகும்" **- மகாத்மாகாந்தி**

✈ ஜெபமானது ஒரு பயிற்சி அல்ல அதுவே வாழ்க்கை" **- மகாத்மாகாந்தி**

✈ "உங்கள் எல்லா ஜெபங்களிலும் கர்த்தரின் கிருபைகளுக்காக நன்றி செலுத்த மறக்காதீர்கள்" **- ஜோன் பன்யன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா விடைப் போட்டி**

**49 இற்கான விடைகள்**

1) பெத்தானியா
2) குஸ்ரரோகியான சீமோன்
3) 30 வெள்ளிக்காசு
4) ஆவி
5) இரண்டு

**வினா விடைப் போட்டி 49ம் சரியான விடை**

**எதுவும் பெறப்படவில்லை.**

☞ இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.

☞ வினா விடைப்போட்டி **50** இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: **10.11.2012**



அனுப்ப வேண்டிய முகவரி :
**ஆசிரியர்,**
**வினாவிடைப் போட்டி - 50**
**'வாலிபன்' -**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,**
**மட்டக்களப்பு.**

## போட்டி பற்றிய நிபந்தனைகள் :

- 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- Q hap; ghlrhi y m jpu;/ ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

✈ சாத்தானின் ஆட்சியிலிருந்தும், அழிவிலிருந்தும் உலகைக் காப்பாற்ற உண்மையுள்ள அதிகமான ஜெபங்கள் அவசியம்" - **E.M. Bounds**

✈ Prayer continues in the desire of the heart through the under standing to be employed on out ward things. - **John wesly**

✈ "ஜெபத்தை முழு இருதயத்தோடு தொடர்ந்து செய்து நிலையாக இருந்து அதன் மூலம் உறுதியுள்ள பொருளை வெளியே துறத்து"

பெரிய சரக்கு வண்டிகளும், பயணிகள் வண்டிகளும் கூட எரிபொருள் நிரப்பாத அளவுக்கு பிசியாக (Busy) இல்லை. நாங்கள் எவ்வளவு நெருக்கமாக இருந்தால் தான் என்ன? புகையிரத ஓட்டியின் கவனத்தை ஈர்க்கும் காரியங்கள் எத்தனைதான் இருந்தாலென்ன? எரிபொருள் நிரப்புவதற்காக வண்டிகள் எப்போதும் நிறுத்தப்படும் அதேபோல் வாழ்க்கையென்னும் கடுகதி புகையிர தத்தில் பிடிபட்டிருக்கும் நாம் எமது எரிபொருள் நிரப்பலுக்கு (ஜெபம்) பரலோக தந்தையுடன் நேரம் செலவிடுவதற்கு நிறுத்தியே ஆக வேண்டும்.

**S. சுதாஜினி**
மெதடிஸ்த திருச்சபை,
களுவன்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தை ஜெயித்த பரலோக அன்பு

**ரோமர் 5:8**

**"கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்."**

வறுமையின் போர்வையில், பசியின் கொடுமையில் உண்மையான அன்பைக் காணாது அதை உலகத்திற்குள் தேடி அலைந்து கொண்டு இருக்கும் ஒரு குட்டிச் சிறுவன், பெற்றோரை இழந்து, உறவுகளால் தள்ளிவிடப்பட்ட நிலையில் அன்பிற்காக ஏங்கிக் கொண்டு தெருவோரத்திலே வாழ்ந்து வந்தான். இதுவரை அச்சிறுவன் தன் வாழ்விலே கண்டிராத தூய அன்பை மட்டும் வரவேற்பதற்கு அவன் உள்ளம் ஆயத்தமாயிருந்தது. தெருவோரத்திலே ஒரு மரத்தின் நிழலிலே தன் சின்னக் கால்களை மடித்து தெருவிலே போகின்றவர்களினதும், வருகின்றவர்களினதும் முகத்தை உற்றுப்பார்த்து கொண்டு இருப்பது தான் அவனின் வேலை. அவர்களில் எவராகிலும் ஒருவரின் முகத்தில் தான் எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருக்கும் அவ்வன்பை கண்டு விடமாட்டோமா என்ற கேள்வியோடு உட்கார்ந்து கொண்டிருந்தான். "மனிதரின் அன்பு மாயையே", உணவு உடைகளை அவர்கள் கொடுத்தார்கள் ஆனால் அச்சிறுவன் எதிர்பார்த்தது அவனுக்கு கிட்டவில்லை. வருடங்கள் கடந்தன........

மனிதர்கள் அச்சிறுவனின் உள்ளத்தைக் காணத் தவறினாலும், அவனை உருவாக்கிய பரலோகத்தின் தேவன் அவன் இருதயத்தின் ஏக்கத்தை கண்டு, அன்று சாமுவேலோடு கூட பேசின அதே தேவன் பரலோகத்தில் இருந்து இறங்கி வந்து அவனை கட்டி அணைத்து அவனோடு கூடப் பேசத் தொடங்கினார். அப்போது தான் அச்சிறுவன் இதுவரை காத்திருந்த அத்தூய அன்பை சுதந்தரித்துக் கொண்டு "வெளி 3:21" இன் பிரகாரம் இயேசப்பாவின் சிங்காசனத்திலே அவரோடு கூட உட்காரும் படிக்கு உயிரோடு எடுத்துக் கொள்ளப்பட்டான்.

**P.G. பிறிசில்லா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனையை ஜெயிப்பது எப்படி?

நம்முடைய சோதனைகளில் நம்மை ஜெயங் கொள்ளச் செய்வது தேவனுடைய கிருபையே. நாம் பாவ சோதனைகளுக்கு இணங்கிப் போய் விடாமல், அவற்றில் ஜெயங் கொள்ளும்படி தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற சில அம்சங்கள் உள்ளன. நாம் சோதனைகளால் நெருக்கப்படும் போது அவற்றை மேற்கொள்ளும் படி கவனமாக இருக்க வேண்டும்.

**சோதனையை மேற்கொள்ள உறுதுணையாக இருக்கும் 7 அம்சங்கள்.**

**01. தீட்டுப்பட மறுத்துவிடு**

பாவத்தின் சோதனையை மேற்கொள்ளும்படி "நான் என்னைத் தீட்டுப்படுத்துவதில்லை" என்ற உறுதியான தீர்மானம் நமக்கு தேவை. எந்த ஒரு பாவத்தையும் மேற்கொள்ளும்படி நமக்கு முதலாவதாக அதற்கு விரோதமான உறுதியான ஒரு தீர்மானம் இன்றியமையாததாகும். அது இல்லாத பட்சத்தில் மற்ற அனைத்திலும் நாம் எளிதில் தவறி விடுவோம். பாவத்திற்கு இணங்க மறுப்போம். தீட்டுப்பட மறுப்போம். நம் பரிசுத்தம் காப்போம்.

**02. உன் உத்தரவாதத்தை எண்ணிப்பார்.**

தேவனால் அழைக்கப்பட்டிருக்கிற நம் ஒவ்வொருவருக்கும் ஓர் உத்தரவாதம் உண்டு. அதில் தேவனுக்கு முன்பாக நாம் உண்மை உடையவர்களாக இருக்க வேவண்டும். நாம் நம்மை தீட்டுப்படுத்திக் கொள்வோமாகில் அந்த உத்தரவாதத்தை இழக்க நேரிடும். மகா பரிசுத்தரான தேவனோடு கூட பரலோகில் ஆளுகை செய்யப் போகிற நாம் இவ்வுலகில் பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாக ஜீவிக்க வேண்டும்.

**03. உன் உன்னத அழைப்பை நினைவிற் கொள்.**

தேவன் நம்மை அழைத்த மகா உன்னதமான அழைப்பின் மேன்மையை நாம் அறிந்திருக்க வேண்டும். சோதனைகளுக்கு இணங்கிவிடுவதன் மூலமும், நம் மனதையும், ஜீவியத்தையும் தீட்டுப்படுத்திக் கொள்வதன் மூலமும், தேவன் தமது உன்னதமான அழைப்பை நம்மில் நிறைவேற்றக் கூடாதபடி நாம் அவரை தடுத்து விடுகிறோம். நாம் அழைக்கப்பட்ட அழைப்பிற்கு பாத்திரமாய் நடந்து கொள்ளும் படி ஜாக்கிரதையாக இருப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. உன்னுடைய எல்லையைப் பற்றி கவனமாக இரு.**

நம் ஜீவியத்தில் நமக்கு நியமிக்கப்பட்டுள்ள எல்லையை or வரையறையை நாம் அறிந்திருக்க வேண்டும். எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது என அப்.பவுல் எழுதுகிறார். நாம் நம்முடைய எல்லையை குறித்து விழிப்புள்ளவர்களாயிருந்து நம்மை சுத்தவான்களாக விளங்கப் பண்ண வேண்டும். ஆகவே தேவ பிள்ளைகளாகிய நாம் தேவனால் நமக்கு விலக்கப்பட்டவைகளுக்கு விலகியிருக்கும் படி கவனமாயிருப்போமாக.

**05. பாவத்தின் அகோரத்தை நினைத்துக் கொள்.**

நாம் செய்கிற பாவம் எதுவாயிருப்பினும் அது தேவனுக்கு விரோதமான ஒரு செயலாகும். தேவனே நமது ஜீவியத்தின் மையப் பொருளாய் இருக்க வேண்டும். மாறாக, நாம் அவரை புறம்பாக வைத்திருந்ததால் நாம் எளிதாக பாவத்திற்கு இணங்கிவிட நேரிடும்.

**06. பிசாசின் சத்தத்திற்கு செவி கொடாதே.**

அனுதினமும் தேவசத்தம் கேட்காதவர்கள் எளிதில் பிசாசின் சத்தத்திற்கு செவிசாய்த்து விடுவர். கர்த்தருடைய வசனத்திற்கு முரண்பட்ட யாவும் அந்நிய சத்தங்களே. ஆகவே பிசாசானவனால் வஞ்சிக்கப்பட்டு போகாதபடி தேவ வசனத்தால் நாம் நமது மனதை நிரப்பிக் கொள்வோமாக.

**07. பாவம் நெருங்கி வர இடமாளிக்காதே.**

நாம் பாவத்திற்கு இடமளிக்கும் போது தான் பாவம் நம்மை மேற்கொள்ளும். சோதனைக்குள்ளாக்கக் கூடும் எந்த சூழ்நிலையையும் தவிர்த்து விடுவதே உண்மையான ஆவிக்குரிய பெலனாகும். எனவே தான் "பொல்லாங்காய் தோன்றுகின்ற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" எனக் கூறப்பட்டுள்ளது (1தெச 5:22) சோதனைக்குள்ளாக்கும் சூழ்நிலைகளுக்கு இடமளிக்காமல் நம்மை சுத்தவான்களாக காத்துக் கொள்வோம்.

மேற்கூறப்பட்டுள்ள ஏழு அம்சங்களையும் நம் ஜீவியத்தில் காத்துக் கொள்வோமாகில், நம்முடைய பரிசுத்தத்திற்கு விரோதமாக வரும் சோதனைகளை நாம் மேற்கொள்வது நிச்சயம்.

**T.D. தனுஜா**

யாழ்ப்பாணம் - தேசிய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையை மறவாதிருங்கள்.

திருவெளிப்பாடு 1:2
(வெளிப்படுத்தல் 1:2)

அவர் கடவுள் அருளும் வாக்குக்கும் இயேசு கிறிஸ்து வெளிப்படுத்திய உண்மைக்கும், ஏன் தாம் கண்டவை அனைத்துக்குமே சான்று பகர்ந்தார்.

திருமறையில் கடவுள் மனிதனுக்கு வெளிப்படுத்திய பல உண்மைகளை நாம் காணலாம். இதனால் திருமறையை உண்மைகளின் தொகுப்பு நூல் எனவும் கூறுவர். உண்மையின் ஊற்றாக கடவுள் காணப்படுகின்றார். எனவே உண்மைக்கு சொந்தக்காரனாக மனிதன் ஒருபோதும் மாறிவிட முடியாது. (யோவான் 14:6). கடவுள் வெளிப்படுத்திய பல உண்மைகளை நாம் கண்டு கேட்டு அனுபவிப்பதோடு நிறுத்தி விடாமல் அதனை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

மனிதன் கடவுளுக்கு தனது மரியாதையை செலுத்தும் முறையாகிய வழிபாட்டில் உண்மைத் தன்மையை திருமறை வலியுறுத்துகின்றது. கடவுளை ஆவியோடும், உண்மையோடு வழிபடுவதே உண்மைக்கு நாம் கொடுக்கும் மதிப்பாகும். (யோவான் 4:24). மேலும் எமது நாளாந்த வாழ்வில் உண்மைக்கு சான்று பகரும்படி இறைவன் எம்மை அழைக்கின்றார். பேதுரு பெந்தேகோஸ்தே பெருவிழாவின் போது மக்கள் முன்னிலையில் எழுந்து நின்று இயேசுவின் மரணத்திற்கு யூதர்களும், ரோமர்களுமே காரணம் என்ற உண்மையை பகிரங்கப்படுத்தினார்.

(அப்போஸ் 2:22,23 / திருத்தூதர் பணிகள் 2:22,23). எமது சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வில் கடவுள் உண்மையை எதிர்பார்க்கின்றார். உண்மைநிலை வாழ்க்கையில் காணாதபோது கடவுள் எம்முடன் வழக்காடுகின்றார் என ஓசியா கூறுகிறார். (ஓசியா 4:1).

மேற்கூறப்பட்ட வேத வாக்கியத்தின்படி ஆதித்திருச்சபை மக்கள் உண்மைக்காக தங்களை அர்ப்பணித்திருந்தனர். கி.பி 64ல் நீரோ திருச்சபையை துன்புறுத்திய போது ஆதித்திருச்சபை மக்கள் உண்மையை விட்டு விலகவில்லை. மாறாக உண்மைக்காக தங்களை அர்ப்பணித்து மரணத்தை ருசி பார்த்தனர். மேலும் கிறிஸ்து பற்றிய உண்மையை பிறருடன் பகிர்ந்து கொள்வதற்காக ஒருவரை ஒருவர் காணும்போது மீன் அடையாளங்களை வரைந்து காட்டி ஒருவரோடு ஒருவர் உண்மைகளைப் பகிர்ந்து கொண்டனர். இதே வண்ணம் துன்புறும் சூழல்களிலும் உண்மைக்கு சவால்கள் ஏற்படும் சூழல்களிலும் கடவுளிடமிருந்து கிறிஸ்து வழியாக நாம் பெற்றுக் கொண்ட உண்மைகளை பிறருக்கு அறிவித்து உண்மைக்கு சான்று பகரும் மக்களாக மாற அழைக்கப்படுகிறோம்.

உண்மை என்பது கடவுள் எமக்குத் தந்த பணிகளை செவ்வனே செய்யும்போதும் கொடைகளை பிறருடன் பகிர்ந்து கொள்ளும் போதும் நாம் உண்மையுள்ளவர்களா? இல்லையா? என்பதை பிறர் கண்டு கொள்வார்கள். எனவே உண்மையுள்ள வாழ்வு நாம் யார் என்பதை பிறருக்குக் காண்பிக்கும். (மத்தேயு 25:21). நாம் வாழும் உலகில் பல்வேறுபட்ட அடிமைத்தனங்களுக்குள் மக்கள் வாழுகின்றனர். இப்பேர்ப்பட்ட மக்களை விடுதலை செய்வதற்கு உண்மையாகிய கிறிஸ்துவை பின்பற்றுவது அவசியமாகின்றது. எனவே உண்மையை அறிவதன் ஊடாக நாம் விடுதலை வாழ்விற்குள் பிரவேசிக்கின்றோம். உண்மையாகிய கிறிஸ்துவை மறந்து விடாமல் வாழ்வதே விடுதலைக்கான ஊற்றாம். (யோவான் 8:32)

ஆக்கம் : **அருட்பணி அருளம்பலம் ஸ்ரீபன்**

இலங்கை இறையியல் கல்லூரி, பிலிமத்தலாவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பதின் வல்லமை



**இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும். அதின் மகிழ்ச்சிக்கு அந்நியன் உடந்தையாகான். (நீதிமொழிகள் 14:10)**

மன்னியாமலிருப்பது, இருதயத்தின் மிகவும் அபாயமான நிலையாகும். ஏனெனில் நாம் பிறரை மன்னிக்காமல் இருப்போம் என்றால், தேவனும் நம்மை மன்னிக்கமாட்டார் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. நாம் மற்றவர்களை மன்னிக்காவிட்டால் நம் விசுவாசம் கிரியை செய்யாது. தேவனிடம் இருந்து வருகிறதெல்லாம் விசுவாசத்தினால் தான் வருகிறது. நம் விசுவாசம் கிரியை செய்யவில்லை என்றால் நாம் மிகுந்த பிரச்சினைக்குள்ளாக இருக்கிறோம்.

கிறிஸ்துவின் சரீரத்தின் வல்லமையில் நாம் ஏன் குறைவுள்ளவர்களாக இருக்கிறோம் என்று கண்டு கொள்வதற்கு ஒரு விசேஷித்த ஞானம் தேவையில்லை. அன்பினால் தான் வல்லமை வருகிறது. வெறுப்பினாலோ, கசப்பினாலோ, மன்னியாதிருத்தலாலோ வருவதில்லை. ஆனால் "எனக்கு செய்யப்பட்டதை நீங்கள் அறியாமல் இரக்கிறீர்கள்", இதுதான் தங்கள் கசப்பு, கோபம், மற்றும் மன்னியாதிருத்தலுக்கு மக்கள் கொடுக்கும் சாட்டு போக்குகள்.

ரோமர் 12:19 இல் "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதி இருக்கிறபடியால், "நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" என்று கூறப்பட்டிருக்கிறது. மக்கள் உங்களுக்கு செய்ததை நீங்களும் திரும்ப செய்ய முயலாதீர்கள். அதை தேவனுடைய கரத்தில் விட்டுவிடுங்கள்.

நம்மை காயப்படுத்தியவர்களை மன்னிக்க வேண்டும். நம்மை அலட்சியப்படுத்துகிறவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். நம்மை சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்று இயேசு கற்றுக் கொடுத்தார். அது கடினம் தான். ஆனால் இதை விட கடினமானது ஒன்று உண்டு. கசப்பினாலும், கோபத்தினாலும் நிறைந்திருப்பதேயாகும். யார் மேலோ வெறுப்புடன் உங்கள் வாழ்க்கையை கழிக்காதீர்கள். எல்லாவற்றையும் தேவன் பார்த்துக்கொள்வார் என்று அவரை முழுமையாக நம்பி அவரின் பலத்த கைகளுக்குள் அடங்கியிருங்கள்.


**கிறிஸ்டியா சபேரானா**
கோட்டைமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன்
VAALIPAN

# குறுக்கெழுத்துப் போட்டி – 58






உருவாக்கம் : J.டெய்சி

## மேலிருந்து கீழ்

01. கர்த்தர் சகலத்தையும் அதினதின் காலத்தில் இவ்வாறு செய்திருக் கிறார் என வேதம் கூறுகிறது. (தலைகீழ்)

03. ஆபிரகாம் தேவனுடைய......... எனப்பட்டான். (தலைகீழ்)

04. இதனைக் கொண்டும் இயேசு ஜனங்களைப் போஷித்தார்.

07. அனனியா, சப்பீராள் விற்றது .

08. சவுல் இவனால் அபிஷேகம் பண்ணப்பட்டான்.

11. சகரியா ஊமையாயிருந்த நாட் களில் இதன் மூலம் ஜனங்களுடன் பேசினான். (தலைகீழ்)

12. மீனின் வயிற்றில் இருந்தவர்.

## இடமிருந்து வலம்

02. பவுல் இந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

05. மோசேயின் தாய் (முதல் எழுத்தின்றி திரும்பியுள்ளது)

06. அறுபது முழ உயரமும், ஆறு முழ அகலமுமான சிலையை பண்ணு வித்த ஒரு ராஜா.

09. எலிசாவின் வேலைக்காரன்.

10. கானா ஊர் கல்யாண வீட்டில் இயேசு தனக்கு .................. இன்னும் வரவில்லை எனது தனது தாயிடம் கூறினார்.

12. ஒரு தீர்க்கதரிசி

13. கர்த்தருடைய இதை அற்பமாக எண்ணக் கூடாது. (திரும்பியுள்ளது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 57 இற்கான விடைகள்

## மேலிருந்து கீழ்

1) னைமவி (மனைவி)
2) ஆக்கில்லா
3) ர்தெபை (தெர்பை)
4) தியோன் {(கி)தியோன்}
6) ஆபிராம்
8) ளகு {குள(ம்)}
11) மேமைன் (மேன்மை)
12. ஜெபம்
13. ரிகி {கிரி(யை)} 14. பாவி
15. ர்வே (வேர்)

## இடமிருந்து வலம்

1) னைகிக்ஆ (ஆக்கினை)
3) ர்முதி (முதிர்) 5) விஆ(ஆவி)
7) கிருபை 9) மாரா
10) லாமேக்கு
14) பாவோனர் (பார்வோன்)
16) கிவேவி (விவேகி)
17) வேஷம்

குறுக்கெழுத்துப் போட்டி 57க்கான
சரியான விடை

**எதுவும் பெறப்படவில்லை.**

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 58ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 10.11.2012**

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**ஆசிரியர்,**
**குறுக்கெழுத்துப் போட்டி - 58**
**"வாலிபன்",**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்**
**மட்டக்களப்பு.**



# சிறுவர்களுக்கான



## வினா விடைப் போட்டி – 50

1) இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி பலவந்தப்படுத்தப்பட்ட மனுஷன் யார்?

..........................................................................................

2) அவனுடைய குமாரர்கள் இருவரின் பெயர் என்ன?

..........................................................................................

3) புளிப்பில்லாத அப்பம் சாப்பிடுகிற பண்டிகையின் பெயர் என்ன?

..........................................................................................

4) முள்முடி சூட்டிய போது இயேசுவுக்கு அணிவித்த மேலங்கியின் நிறம் என்ன?

..........................................................................................

5) இயேசுவுக்குப் பதிலாக விடுதலை செய்யப்பட்ட குற்றவாளி யார்?

..........................................................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரத்தில் இன்னுமோர் புதிய வருடம்....
## கிரான் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம் (1958...)

1958ம் ஆண்டு அருட்திரு இயேசுசகாயம் "சின்னண்ணன்" அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட கிரான் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம் தனது 54வது ஆண்டு நிறைவை செப்டம்பர் மாதம் 14, 15ம் திகதி வெகு விமர்சையாக நினைவுகூர்ந்தது.

இவ்வாரதனைகளிலும், நிகழ்வுகளிலும் மெதடிஸ்த, அங்கிலிக்கன், தென்னந்தியத் திருச்சபை சபைத்தலைவர்களும் பெருந்திரளான விசுவாசிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.










**கேள்வி - பதில் பகுதி**

**கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம் வளரவென இப்பகுதி ஆரம்பிக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை தபாலட்டையிலோ அல்லது e-mail மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.**



**கேள்வி - பதில் பகுதி**
ஆசிரியர்
வாலிபன் ஊழியங்கள், மெதடிஸ்த திருச்சபை.
கோட்டைமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டைமுனை மெதடிஸ்த திருஅவையின் 142வது ஆண்டு நிறைவு நன்றி செலுத்தும் வழிபாடும், நிகழ்வுகளும்.

கிழக்கிலங்கையில் பதினான்கு தசாப்தங்களுக்கு மேலாக கிறிஸ்துவின் புகழ் பரப்பி நிற்கும் கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபை தனது 142வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் வழிபாடுகளிலும் திருமறைப் படிப்புக்களிலும் ஏனைய நிகழ்வு களிலும் கலந்து சிறப்பிக்க தங்களை உற்றார், உறவினர், நண்பர்கள், குடும்பம் சகிதமாய் அன்போடு வரவேற்கின்றனர்.



***பிரதம இறை செய்தியாளர் :***

**அருட் கலாநிதி A.W. ஜெபநேசன்**

தலைவர், மெதடிஸ்த திருச்சபை, இலங்கை

| | |
|---|---|
| கார்த்திகை 9 – மாலை 5 மணி | : இறைபடிப்புடன் ஆரம்ப வழிபாடு |
| கார்த்திகை 10 – காலை 8 மணி | : திருமுழுக்குடன் முழுநாள் நிகழ்வுகள் |
| கார்த்திகை 11 – காலை 7.30 மணி | : திடப்படுத்தல், திருவிருந்துடன் நன்றி செலுத்தும் வழிபாடு |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**முகாமைக்குருவும், சபையினரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டைப் பானை

ஒரு ஊரில் ஒரு முதியவர் இருந்தார். அவர் தினமும் காலையில் காவடியில் இருபுறமும் பானைகள் தொங்க தண்ணீர் சுமந்து வருவார். தன் வீட்டிலிருந்து சற்று தூரத்திலுள்ள கிணற்றிலிருந்து தண்ணீரை சுமந்து வந்து தன் குடிசையில் சேர்ப்பதே அவரது அனுதின வேலை. அவரது காவடியிலுள்ள இரண்டு பானைகளில் ஒன்று நல்ல பானை. மற்றொன்று விரிசலுள்ள ஓட்டைப்பானை. ஓட்டைப்பானையில் அவருக்கு தினமும் அரைப்பானை தண்ணீர் தான் கிடைத்து வந்தது.

ஓட்டைப்பானையின் நிலைமையை பார்த்து நல்ல பானை பரிகாசம் செய்து வந்தது. ஓட்டைப் பானை மிகவும் மனமுடைந்து தான் உருவாக்கப்பட்டதின் பயனை தான் முழுமையாக செய்து முடிக்கவில்லையே என்று வருந்தியது. ஒரு வருடங்களாக தன்வேதனையை அடக்கி வைத்திருந்த ஓட்டைப் பானை தன்னை சுமக்கும் அந்த மனிதனிடம் ஒரு நாள் "ஐயா என்னைத் தயவுசெய்து மன்னியுங்கள். பலவருட உழைப்பினால் என்உடல் தேய்ந்து என்னால் பாதி நீரைத்தான் தங்களுக்கும், தங்கள் குடும்பத்திற்கும் தர முடிகிறது. பாதித் தாகம் மட்டுமே தணிக்க உதவும். இயலாமை என்னை வேதனைப்பட வைக்கிறது." என்றது அந்த ஓட்டைப்பானை".

இதைக் கேட்ட அந்த முதியவர் சிரித்தார். பின் "இன்று நாம் தண்ணீர் எடுத்துக்கொண்டு வீடு திரும்பும்போது நீ வரும்வழியைக் கவனமாகப் பார்!" என்று கூறிவிட்டு அந்த இரு பானைகளையும் சுமந்தபடி வீடு நோக்கி நடந்தார்.

பானையும் அவ்வாறே செய்தது. அதனுடைய பக்கத்தில் மட்டும் செடிகொடிகள், பூக்களுடன் தென்பட்டது.

**C.J. Zeba**

உமக்காக ஊழியங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு அந்த முதியவர் ஓட்டைப்பானையிடம் "உன்னுடைய பக்கம் மட்டும் எவ்வளவு இயற்கை வளத்துடன் அழகாக உள்ளது பார்த்தாயா"?

எனக்கு தெரியும் உன்னில் ஓட்டை இருக்கிறது என்று, ஆனாலும் நீ உழைக்க தயாராக இருந்ததால் உன்னை வேறுவழியில் பயன்படுத்திக் கொண்டேன்! இன்று உன்னால், நான் நடந்து சென்று வரும் களைப்பு தெரியவில்லை, மலர்கள் வீட்டை அலங்கரிக்கின்றன, காய்கறிகள் சமையலுக்கு உதவுகின்றன. இவையனைத்தும் நீ தண்ணீர் ஊற்றி வளர்த்தவை தானே. நீ உன்னைப் போல் இருப்பதால் தான் இவையனைத்தும் நடந்தது என்று கூறினார். இதைக் கேட்ட ஓட்டைப்பானையின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கியது. தன் இருகரங்களையும் கூப்பி அந்த முதியவருக்கு நன்றி கூறியது.

ஆம் நண்பர்களே! கலங்க வேண்டாம், நம்மிடமுள்ள பலவீனங்களை நினைத்து நாம் கலங்க வேண்டாம். நாம் எந்த நிலையில் இருந்தாலும் அவர் (இயேசு) நம்மைப் பயன்படுத்துவார். நாம் குறைவுள்ளவர்கள், எதற்கும் பயன்பட முடியாது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் ஏதாவதொரு வகையில் இயேசு நம்மைப் பயன்படுத்த வல்லவராயிருக்கிறார்.

**"என்கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்"**

***II*** கொரிந்தியர் 12:9

---

"வாலிபன்" ஊழியங்களின் ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டிய *நன்றி செலுத்தும்* வழிபாடு மார்கழி 9, 2012 மெதடிஸ்த திருஅவை, கோட்டமுனை.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**- வாலிபன் குடும்பம் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மை

சிறுவர் பகுதி

ஒரு நாட்டில் இராணுவ சேவை அமுலில் இருந்தது. ஆனால் ஒரு இளைஞன் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள விரும்பினான் வைத்திய பரிசோதனையின் போது தான் ஒரு கண் தெரியாதவன் போல் நடிக்க விரும்பினான். பரிசோனை செய்பவர் இந்த குறிப்பிட்ட இளைஞனிடம் முன் சுவரில் உள்ள எழுத்துக்களை வாசிக்கும்படி கேட்க அந்த இளைஞன் "முன்பு ஒரு சுவர் உண்டா?" எனக் கேட்டான்.

இதனால் அவன் அந்த கட்டாய இராணுவ சேவையிலிருந்து தப்பித்துக் கொண்டான். சில நாட்களின் பின் அந்த இளைஞன் ஒரு கண்காட்சியை பார்க்கச் சென்றிருந்தான். அங்கே அதே இடத்திற்கு இவனை பரிசோதித்த அந்த வைத்தியரும் வந்திருந்தார். அந்த வைத்தியர் அந்த இளைஞரை இனங்கண்டு அவனிடம் "உனக்கு கண் தெரியாது என்றாய் இப்போது இங்கே என்ன செய்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன் ஓ..... இது கண்காட்சி நடக்கும் இடமா, நான்........... புகையிரத நிலையம் என்று நினைத்தேன் என்று சொன்னார்.

அந்த இளைஞன் இவ்வாறு சொல்லி அந்த மருத்துவரிடம் மாட்டிக் கொண்டான்.

அன்பு தம்பி, தங்கையரே எம் வாழ்வில் நேர்மை என்பது மிக முக்கியம். நாம் பெற்றோரையோ, பெரியோரையோ ஏமாற்றக்கூடாது. நாம் பிறரை ஏமாற்றும் போது எம்மையே ஏமாற்றிக் கொள்கிறோம்.

நாம் பிறரை ஏமாற்றலாம். ஆனால் நம்முடைய இயேசப்பாவை ஏமாற்றலாமா நாம் அவருடைய செல்ல பிள்ளைகள். அவர் நமக்காக பாடுபட்டு சிலுவையில் இரத்தம் சிந்தி 3ம் நாள் உயிர்த்தெழுந்தார். நாம் பிறரை ஏமாற்றும் போது எமது இயேசப்பாவையும் ஏமாற்றுகிறோம். நேர்மையாக நடக்கிறவன் நம்பிக்கையாய் நடக்கிறான். தன் வழிகளைக் கெடுக்கிறவனோ வெளிப்படுத்தப் படுவான்.

இன்றிலிருந்து நாம் ஒரு தீர்மானம் எடுப்போமா?

**P.R. ஜீவந்தி**
கோட்டைமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் ஜெபத் தேவைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, **SMS** மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

**SMS க்கான இலக்கங்கள் :**

**077-7813269, 077-2335106,**

**0779-584930, 077-7718847**

வாலிபர்களுக்கான விஷேட ஜெபம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 7.00 மணிக்கு **கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில்** இடம்பெறும்.

இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும், அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய் எம்மைத் தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும், சபைகளையும் நிரப்புவதாக!

**மெதடிஸ்த வாலிபர் ஒன்றியம் -**

**கோட்டைமுனை.**


**கடிதத் தொடர்புகளுக்கு :**

**ஆசிரியர்,**

**"வாலிபன்" சஞ்சிகை,**

மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை, மட்டக்களப்பு, இலங்கை.

மின்னஞ்சல் :vaalipan_kyf@yahoo.com



சன் அச்சகம் - மட்டக்களப்பு. 065-2222597





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org